செ.வெ.எண்: 95 நாள்: 03.02.2020

**வள்ளலார் நினைவு நாளில் டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூட உத்தரவு.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

வள்ளலார் நினைவு நாளில் டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூட உத்தரவு. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

"வள்ளலார் நினைவு நாள்" 08.02.2020 (சனிக்கிழமை) அன்று டாஸ்மாக் நிறுவனத்தின் அனைத்து இந்திய தயாரிப்பு அந்நிய மதுபான சில்லரை விற்பனைக் கடைகள் மற்றும் மதுபானக் கூடங்களில் விற்பனை நடைபெறாமலும், மூடப்பட்டும் இருக்க வேண்டும்.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபானக் கடைகள், மதுபானக்கூடங்கள்(பார்) மற்றும் FL3, ஹோட்டல் பார்கள் ஆகியவற்றில் மேற்கண்ட ஒரு நாள் மட்டும் 08.02.2020 மது விற்பனை ஏதும் நடைபெறாது என்றும், அவை யாவும் மூடப்பட்டிருக்கவும் வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**